**அபிப்பிராயம்**

--------------------

நவீன தொழில்நுட்பவியல் ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-----------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வாளரின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின்

பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | செயற்திட்டமொன்றிற்காக ஆண்டின் செயற்பாட்டு வருமானம் ரூபா1,853,678 ஆன போதிலும், அது ரூபா 2,326,768 ஆக ரூபா 473,090 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்திற்குரிய செலவினங்கள் கணக்கிள் செலவினங்களுக்கொதிராக பற்றுச்சீட்டுகளின் பெறுவனவாக ரூபா 473,090 தொகையான ஏனைய செயற்திட்டங்களுக்கு கிடைத்த 17 பற்றுச்சீட்டுகளும் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் அந்த பெறுமதியால் செலவினக் கணக்கு குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2012/2013/SSCCTV/NWSDB செயற்திட்டத்திற்குரிய வேறு சில செயற்திட்டங்களுக்காக கிடைத்த சில பற்றுச்சீட்டுகளின் குறியீட்டு இலக்கங்கள் கணனிமயப்படுத்தப்பட்டு கணக்கீட்டு முறைமைக்கு உறுதிப்படுத்தும் போது தவறுதலாக மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதனை இந்த வருடத்தில் திருத்துவவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சரியான கணக்கீட்டு முறைமைகள் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த பெற வேண்டிய மீதிகள் 2 இன் ரூபா 76,081 இனால் கூடுதலாகவும், பெற வேண்டிய மீதியொன்று ரூபா | அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமையை இந்த ஆண்டினுள் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், குறைத்துக் | ஆண்டிற்குரிய செலவினங்கள் மாத்திரம் கணக்குகளுக்கு எடுக்கப்பட வேண்டியதுடன், சரியான கணக்கீட்டு முறைமைகள் |

| | | |
|---|---|---|
| 49,369 இனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய செலவினங்கள் ரூபா 49,369 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | காண்பிக்கப்பட்டமை 2019 ஆம் ஆண்டின் கணக்குகளினுள் திருத்டதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | | | |
| (i) II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | பதிற்கடமை நியமனமானது நிரந்தர நியமனம் ஒன்று வழங்கப்படும் வரை, தற்காலிக மாற்றீடாக இருக்க வேண்டியதுடன், முழு நேர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவையாயின் நிரந்தர நியமனத்தை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டிய போதிலும், 03 பதவிகளுக்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டுகள் தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை பதிற்கடமை நியமனம் | வெற்றிடங்களை நிரப்புவதற்காக நிறுவன மட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள துடன், நாளாந்த பணிகளை மேற்கொள்வதில் தற்காலிக தீர்வொன்றாக பதிற்கடமைக்காக உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் பிரதான மேவுகைப் பதவியென்பதால், வெற்றிடங்களை நிரப்புவதற்காக தாமதமின்றி செயற்பட வேண்டும்.<br><br>குறித்த பதவிக்காக விண்ணப்பதாரர்கள் முன்வராமைக்கான காரணங்களை ஆராய்ந்து, ஆட்சேர்ப்பு நடைமுறையில் உரிய திருத்தங்களை முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்டிருந்த வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | VII ஆம் அத்தியாயத்தின் 12.5.4 ஆம் பிரிவு மற்றும் 12.7 ஆம் பிரிவு | உத்தியோகத்தர் ஒருவர் ஏதேனுமொரு பதவியை வகிக்கும் சந்ததர்ப்பத்தில் மற்றுமொரு பதவியில் பதிற்கடமையில் ஈடுபடும் போது, பதிற்கடமை பதவிக்குரிய அடிப்படை சம்பளத்தில் 25% இற்கான உரித்துடையதுடன், VII ஆம் அத்தியாயத்தில் 12.7 ஆம் பிரிவின் பிரகாரம் படிகளை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில், நிரந்தர பதவிக்குரிய படிகளுக்கு மாத்திரம் உரித்துடைய போதிலும், அதற்கு முரணாக பதிற்கடமை பதவிகளுக்கு உரித்துடைய போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளாக இரண்டு உத்தியோகத்தர்களுக்காக ரூபா 4,584,116 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த உயர் நிலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்காக வெளிவாரி விண்ணப்பதாரர்கள் கோரிக்கை விடுக்காததுடன், நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நெருக்கடி நிலமைக்கு உள்ளாவதை தடுக்கும் நோக்கில் நிறுவனத்தின் தகைமைவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அவர்களின் தற்போதைய கடமைகளுக்கு மேலதிகமாக அதற்கு உயரிய வெற்றிடம் நிலவும் பதவிகளில் பதிற்கடமை புரிவதற்காக நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த பதிற்கடமை பதவிக்குரியதாக நிறைவேற்றப்பட வேண்டிய அனைத்து கடமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உத்தியோகபூர்வ பயணங்கள் ஆகியவற்றை சுயமாக ஏற்கின்றமையால் கட்டுப்பாட்டுச் சபையின் தீர்மானத்தின் அடிப்படைடயில் போக்குவரத்து படிகள் | பதிற்கடமை நியமனமானது நிரந்தர நியமனம் ஒன்று வழங்கப்படும் வரை, தற்காலிக மாற்றீடாக இருக்க வேண்டியதுடன், முழு நேர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவையாயின் நிரந்தர நியமனத்தை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். பதவிக்கான நிரந்தர நியமனமொன்றை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மற்றும் எரிபொருள் படிகள் வழங்கப்பட்டுள்ளன. தாபனவிதிக் கோவையின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்களுக்காக பதிற்கடமை பதவியின் சம்பளத்தின் 25% இனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2013 ஆகஸ்ட் 02 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க வியாபார மற்றும் முதலீட்டு கொள்கை சுற்றறிக்கை. | சுழற்சி சேவைக்காலமான 12 வருடங்களை பூர்த்தி செய்யும் போது வரி விடுதலையளிக்கப்பட்ட வாகன அனுமதிப்பத்திரமொன்றை பெறுவதற்கு வசதிகள் பெற்ற போதிலும், அதற்கு முரணாக 2005 ஏப்ரல் 21 முதல் நிர்வாக உத்தியோகத்தர் II (இடைமட்ட முகாமையாாளர் தரம்) பதவியில் சேவையாற்றும் பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு 08 வருடங்கள் மாத்திரம் பூர்த்தியடைந்ததன் பின்னர் 2013 திசெம்பர 23 ஆந் திகதிய அமைச்சின் செயலாளரின் கடிதம் மூலம் வாகன அனுமதிப்பத்திர இலக்கம் MOTR/02/13/13 இன் கீழ் வரிச் சலுகையுடனனான வாகனமெமான்றினை இறக்குமதி செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | ஜீ.எச்.சீ.ஜயராணி அவரகள் 1991.06.11 ஆந் திகதி இந்த நிறுவனத்தின் உதவி நூலக சேவையின் உத்தியோகத்தராக சேவையில் இணைந்து, 1992.12.07 ஆந் திகதி அப்போது நிலவிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறையின் கீழ் ஐந்து வருட சட்டத்தரணி பட்டம் மற்றும் சட்டத்தரணி தகைமையுடன் உரிய மூன்று வருட அனுபவத்தின் கீழ் நிர்வாக உத்தியோகத்தர் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார். அப்போது நிலவிய நிர்வாக உத்தியோகத்தர் பதவியானது அப்போது நிறுவனத்தின் நிறைவேற்று செயலாளர் பதவிக்க நேரடியாக கடமைகளை வகித்த பட்டப்படிப்பு தகைமையுடனான உரிய அனுபவத்துடன் இணைத்துக்கொள்ளப்பட்ட பதவியொன்றாகும். அது அப்போது நிலவிய பதவிநிலைகளில் (ஊடக உத்தியோகத்தர், நூலகர், பொறியியலாளர், | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும் என்பது, படிகள் செலுத்தல், நலன்களை பெற்றுக்கொள்ளல் ஆகிய விடயங்களுக்குரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் உரியதாக ஏதேனும் தெளிவின்மைகள் ஏற்பட்டுள்ள போது குறித்த உத்தியோகத்தர்களை விசாரிப்பதன் மூலம் விடயங்கள் தெளிவுபடுத்தப்படல் வேண்டும் என்பது. |

கணக்காளர் மற்றும் கட்டமைப்பு ஆய்வாளர்) உடன் காணப்பட்ட உயர் முகாமைத்துவ மட்டத்திலான நிறைவேற்று தரத்தின் பதவியொன்றாகும்.அந்த நிர்வாக உத்தியோகத்தர் பதவி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின உதவி பணிப்பாளர் / பிரதிப் பணப்பாளராக பெயரிடப்பட்டுள்ளது.

எனினும், தற்போது 2012 ஆம் ஆண்டின் மற்றும் 2016 ஆம் ஆண்டின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினூடாக அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக உத்தியோகத்தர் பதவி க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் தோற்றுவதன் மூலம் மாத்திரம் மற்றும் அந்த பதவிக்குரிய அனுபவத்துடன் அந்த நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்க முடியும்.

அந்த புதிய பதவி இடை முகாமைத்துவ மட்டத்திலான பதவியொான்றாகும்.
விடயங்கள் அவ்வாறிருக்க அப்போது நிலவிய நிர்வாக உத்தியோகத்தர் பதவி மற்றும் தற்போதைய நிர்வாக உத்தியோகத்தர் பதவி ஆகிய இரண்டு பதவிகளினதும் பெயர் ஒன்றான போதிலும், அந்த பதவிகளை சமனானதாக கொள்ள முடியாத இரு பதவிகளாகும்.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 5,501,052 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா 1,084,738 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 4,416,314 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீண்டெழும் ஏற்பாடுகளின் பெறுவனவு ரூபா 1,825,924 இனால் அதிகரித்தமையும், அஸ்பன்டஸ் செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட ரூபா 5,120,440 ஆன நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமையும் பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள் மற்றும் செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேயிலைகளை தரப்படுத்துவதற்காக குறைந்த கிரயத்திலான இயந்திரமொன்றினை உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டமொன்று 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும், அதற்காக ரூபா 4,209,066 தொகையான செலினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் மேற்கொள்ளப்பட்ட நடைமுறை வெற்றியடையாமையால் 2016 ஆம் ஆண்டின் போது தனியார் நிறுவனமொன்றுடன் ரூபா 8,000,000 ஆன தொகைக்கு இந்த இயந்திரத்தினை உற்பத்தி செய்வதற்காக உடன்படிக்கை | இந்த சுற்றறிக்கையின் Xilinx FPGA உயர் தொழில்நுட்ப இலத்திரனியல் இயந்திரக் கட்டமைப்பிற்காக E-Net நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந் தது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஆதர் சீ கிளாக் நிறுவனம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய இயந்திர உற்பத்திகள் குறிப்பிடப்படுவதுடன், | விசேடமான ஆராய்ச்சி செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் அது நிறுவனத்தின் விடயப்பரப்பிற்கு உள்ளடங்குமா என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.<br><br>ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் கிரயம் மற்றும் நலன்கள், காலம், பெறுபேறு ஆகியவற்றுக்கான சாத்தியவளக் கற்கையொன்றினை மேற்கொள்ள வேண்டும் |

கைச்சாத்திடப்பட்டிருந்தது. 4 கட்டங்களை கொண்ட இந்த செயற்திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஆகஸ்ட் மாதமளவில் இயந்திரத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு தொழில்நுட்ப கையளிப்புகளை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், 2019 மே மாதம் வரையிலும் இரண்டாம் கட்டத்தின் பணிகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டு வரையிலும், இந்த செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட எந்தவொரு உபகரணமும் தனியார் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பின்னர் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

E-Net நிறுவனம் அதற்கமைய எமது நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய Deliverables குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கையின் கட்டம் 02 இற்குரிய எமது நிறுவனத்தினால் நிறைவு செய்யப்பட்டு வழங்கப்பட வேண்டிய இயந்திர உதிரிப்பாகங்களுக்காக கூடியளவு காலம் செலவிடப்பட்டது.இந்த விசேட நுட்பமான இயந்திர பகுதிகளின் உற்பத்திக்காக முன்னாயத்தத்துடனான வேலைத்தளங்கள் (Workshops) அரிதாகும். அதற்காக செலவிடப்படும் காலம் மிகவும் அதிகமாகும். அதனால் கட்டம் 02 இனை நிறைவு செய்வதற்கு அதிக காலம் எடுத்தது. அதிலிருந்து கட்டம் 03 இற்காக உடன்படிக்கை கைச்சாத்திடல் 2019 ஏப்ரல் மாதத்தின் போது இடம்பெற்றது. தேயிலை தொழிற்சாலைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிகளை பயன்படுத்தி குறித்த பரிசோதனைகள்

என்பது.

| | | | |
|---|---|---|---|
| | | தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | புவி அவதானிப்பு தரவுகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் பகிர்ந்நதளித்தலுக்காக தேசிய நிலையமொன்றினை தாபிக்கு செயற்திட்டமொன்றிற்காக சீன முகவர் நிறுவனமொன்றுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்ற கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அதற்காக எந்தவொரு திட்டம் அல்லது புவி தொடர்பான சாத்தியவளக் கற்கையொன்றின் மூலம் அல்லாது காணியொன்றினை தெரிவு செய்து, சட்டரீதியான உரித்தற்ற அந்த காணியை சுற்றிழும் வேலியொன்றினை அமைப்பதற்காக ரூபா 3,545,744 ஆன தொகை 2016 ஆம் ஆண்டின் போது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் சீன முகவர் நிறுவனத்தினால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு சுற்றுலாக்களில் அந்த நிலம் செயற்திட்டத்திற்கு பொருத்தமானதல்ல என்பதால் மற்றுமொரு நிலத்தினை தேடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த பணம் பெற வேண்டிய கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், நடைமுறை நிர்மாணங்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 மே மாதம் வரையிலும் பொருத்தமான காணியொன்றினை முறையாக கையேற்ற செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை | புவி கண்காணிப்பு செய்மதி தரவுகளை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் பகிர்ந்தளிப்பதற்கான உத்தேச தேசிய நிலையத்திற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையினூடாக ஹோமாகம் பிடிபத மாஹேன் வத்த பிரதேசத்தில் ஒதுக்கப்பட்ட காணிகள் தொடர்பான சாத்தியவளக் கற்கையொன்றினை மேற்கொண்டதுடன், பொருத்தமான காணியொன்று அதற்காக தெரிவு செய்யப்பட்டது. இதன் போது அந்த தெரிவு செய்யப்பட்ட நிலத்தினை மையமாக கொண்டு அதனை சுற்றிழும் உள்ள காணிகளில் எதிர்காலத்தில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கும் கட்டிடங்களின் உச்ச உயரம் தீர்மானிக்கப்பட்டு அது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டது. அந்த தெரிவு செய்யப்பட்ட | இவ்வாறானதொரு செயற்திட்டத்தின் தேவைப்பாடு, சமூக மற்றும் பொருளாதார தாக்கங்கள் ஆகிய விடயங்களையும் கவனத்திற் கொள்ளப்பட்டு முறையான சாத்தியவளக் கற்கையொன்றினை மேற்கொள்ள வேண்டியமை, மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் அருகில் தொலைத்தொடர்பு கோபுரமொன்று அமைக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் ஏனைய தரப்பினரான சீன செய்மதி தரவு தொடர்பான தேசிய நிறுவனத்தின் (RADI) பொறியியளாலர்கள் இந்த நிலத்தினை கண்காணிப்பதற்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில் மற்றுமொரு காணியை பெற்றுக்கொள்வதற்கு ள்ள இயலுமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய டெக்னோசிட்டி (Techno City) செயற்திட்டத்தின் பாதுக்க ஹோரகல பிரதேசத்தின் பொருத்தமான காணியொன்று தெரிவு செய்யப்பட்டதுடன், அதற்கு சீன பொறியியளாலர்களின் இணக்கப்பாடு வெளிப்படுத்தப்பட்டது. | |
| (இ) | 2012 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாது காணப்படும் கிரயம் ரூபா 4,104,433 தொகையான இருப்புகளிடையே பயன்படுத்த முடியாத இருப்புகள் மற்றும் மெதுவாக நகரும் இருப்புகள் இனங்காணப்பட்டு | விளைவற்ற இருப்பினை பேணிச்செல்லல் தொடர்பில் கண்காய்வில் மேற்கொள்ளப்படும் அவதானிப்புகள் | இருப்பு உருப்படிகளை கொள்வனவு செய்யும் போது தேவைப்பாட்டினை இனங்கண்டு அதற்கமைய கொள்வனவு செய்ய நடவடிக்கை முன்னெடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | கைத்தவிர்ப்பதற்கு இல்லது நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான போதிலும், இந்த நிறுவன ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டத்தினை விரிவுபடுத்தி ஆராய்ச்சி நிறுவனமொன்றானமை யால் ஒருதொகை இலத்திரனியல் உபகரணங்களின் இருப்பினை பேணிச்செல்ல நேர்ந்துள்ளது. செயற்திட்டத்தினை ஆரம்பிக்கும் போது போன்றே செயற்திட்டத்தினை பேணிச் செல்லும் போதுஅந்த பழுதுபார்த்தல் பணிகளின் போது குறித்த விசேடமான உபகரணங்களை சந்தையில் கொள்வனவு செய்தல் கடினமானதாகும். இதன் காரணமாக இந்த இருப்பினை பேணிச்செல்ல நேர்ந்துள்ளது. | வேண்டியமை மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஈ) | வியசாய வறட்சி கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை கட்டமைப்பொன்றினை தயாரிக்கும் செயற்திட்டம், நிறங்களை இனங்காணும் தரவுகள், வங்கிகளிலிருந்து தரவுகளை சேகரித்தல் பணிகள் மற்றும் புவியியல் வலைத்தளமொன்றினை தயாரிக்கும் பணி ஆகிய 03 பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும், அவற்றை நாட்டினுள் | வியசாய வறட்சி கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை கட்டமைபின் பணிகள் 90% அளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அதனடன் தொடர்புடைய ஏனைய அரச நிறுவனங்களின் பங்களிப்பிலான பற்றாக்குறை | நிறுவனத்தின் நோக்கங்களை செயற்திறனாக நிறைவேற்றுவதற்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நடைமுறைச் சாத்தயமாக பயன்படுத்த பொருத்தமான வேலைத்திட்டமொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காரணமாக இறுதிக் கட்டத்தின் பணிகள் தாமதமாகியுள்ளது. எனினும் விதாதா வள நிலையங்களில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் ஒத்துழைப்பினை பெற்ற செய்மதி தரவுகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள், விளைச்சல் பூமியின் தகவல்களுடன் ஒப்பிடும் பணிகள் தொழில்நுட்ப உபகரணங்களின் பயன்பாட்டினால் (Google Drive) மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | |

## 3.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆதர் சீ கிளார்க் நிலையத்தினால் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் கட்டமைப்புகள் தொடர்பிலான பரிசோதனையின் போது ரூபா 24,081,518 பெறுமதியான சொத்துக்கள் | | |

| | | |
|---|---|---|
| 6 பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | | |
| **(i) Webhost 6 pro software dongle with server documents** | Webhost 6 மென்பொருள் 2012 ஆம் ஆண்டின் போது ஆராய்ச்சிப் பணிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டதுடன், இன்னும் அது ரொபோ தொழில்நுட்ப ஆராய்ச்சிக்காக பயன்படுத்தப்படுகின்றது. தற்போது அந்த மென்பொருள் ஆய்வுகூடத்தினுள் கணனிகளில் பயன்படுத்தப்படுகின்றது. | உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது தேவைப்பாட்டினை இனங்கண்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| **(ii) Unmanned Arial Vehicle 555FF with accessories** | 2015 ஆம் ஆண்டின் போது பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டின் போது பிரித்தானிய QuestUAV நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்பட்ட QuestUAV Agropro – 200 ரகத்திலான ருயுஏ விமானம் 150 மீட்டர்கள் (500 அடி) அளவில் பறப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்துடன், கொள்வனவு செய்யப்பட்டது. இந்த UAV விமானத்தினை கொள்வனவு செய்ததன் பின்னர் அதனை பறப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்ட ஆகக் குறைந்த உயரத்தில் (400 | |

| | |
|---|---|
| | அடி) பறப்பதற்காக பாதுகாப்பு பதவியணியின் தலைமை அலுவலகத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்காததுடன், இலங்கை சிவில் விமான கட்டுப்பாட்டு அதிகாரசபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| **(iii) Ander Brand Apogee Aspen G 900 Compact 9.3 megapixel scientific CCD camera / MEADE Brand LX850 ACF 14" Astronomical Telescope and Accessories** | வானியல் தொலைநோக்கியை இலங்கையின் வானிலை அவதானிப்புகளுக்காக பயன்படுத்துவதற்காக உரிய நவீனமயப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அந்த பணிகளை தேசிய அடிப்படையில் வெற்றிகரமாக பூர்த்தி செய்து வானியல் தொலைநோக்கி மற்றும் அதன் கெமராவினை ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக இது வரையிலும் பயன்படுத்தப்பட்டவாறு உள்ளது. |
| **(iv) Dell Inspirer 155000 series laptop** | அந்த மடி கணனி நிறுவனத்தில் நடாத்தப்படும் பாடநெறிகள் பலவற்றுக்காக நிலவும் செய்முறைப் பயிற்சி ஆய்வுகூடத்தினை பய்னபடுத்தி தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | | சந்தர்ப்பங்களில பயன்படுத்தப்படுகின்றது. | |
| | **(v) Celectron Brand OMNIXLT 150 Newtonian telescope** | சர்வதேச வானியல் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிக்காக பயன்படுத்தும் நோக்கில் இந்த 10 தொலைநோக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன், அது அந்த போட்டித் தொடரருக்காக வெற்றிகரிமாக பயன்படுத்தப்பட்டது. இந்த தொலைநோக்கிகள் மூலம் இரவு வானின் கண்காணிப்பு செயலமர்வினையும் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கைத்தொழில் சேவைகள் பிரிவின் (ISD) மூலம் மேற்கொள்ளப்படும் பிரதான சேவைகள் இரண்டின் மற்றைய ஒரு சேவையான CFL மற்றும் LED மின்குமிழ்களின் செயலாற்றல் பரிசோதனை (Performance Test) மற்றும் வலுச்சக்தி செயலாற்றல் பரிசோதனை (Energy Efficient Test) இற்காக பயன்படுத்தப்படும் பெறுமதி ரூபா 15,479,510 தொகையான ஒளிப் பரிசோதனைக் கட்டமைப்பு (Light Management System) அதனுடன் தொடர்புடைய உபகரணங்களின் வழுக்களின் காரணமாக | ஒளிப் பரிசோதனைக் கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களின் வழுக்களின் காரணமாக இரு சந்தரப்பங்களில் இரு வழிகளில்<br>ஏற்பட்டமையாலும், குறித்த உபகரணத்தின் உத்தரவாதக் காலம் முடிவடைந்திருற்தமையால் கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒன்றுக்கொன்று தொடர்புபடாத பல்வேறு குறைபாடுகளின் காரணமாக 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதி முதல் கணக்காய்வு அவதானிப்பில் | நிறுவனத்தின் விடயப்பரப்பிற்கு உள்ளடங்கும் செயற்திட்டங்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட வேண்டும்.<br><br>பழுதுபார்த்தலின் போது அதற்கான கிரயம், காலம், தொழில்நுட்பம் போன்ற அனைத்து விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பது.<br><br>பெறுகை பணியின் போது இயந்திரமொன்றின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்கள் தொழில்நுட்பம் ஆகிய விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு அதற்கு |

| | | |
|---|---|---|
| 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதி முதல் 2019 மே கண்காய்வு திகதி வரையிலும் 19 மாதங்கள் செயலற்றுக் காணப்பட்டது. | குறிப்பிடப்பட்ட திகதி வரையிலும் உபகரண கட்டமைப்பு செயலற்றுக் காணப்பட்டது. இந்த உபகரணம் விசேடமான செயலாற்றலுக்காக உருவாக்கப்பட்டுள்ளமைய ால் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு பழுதுபார்ப்பதற்கு விசேடமான அறிவொன்று தேவைப்படுகின்றது. அதனால் உபகரணங்களின் விநியோகத்தரால் உற்பத்தி நிறுவனமான ஐக்கிய அமெரிக்க குடியரசின் லெப்ஸ்பியர் (Labsphere) கம்பனியுடன் செயற்படும் போது கருத்திற்கொள்ளப்படக்கூடி ய காலமொன்று தேவையாகும். | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

---

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தின் ரூபா 100,000,000 பெறுமதியான 100 பணிகள் வரை காணப்படுவதுடன், அவற்றுள் 18 மேற்கொள்ளப்பட்டிராமையால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட 6 பாடநெறிகளும், 04 மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினதும் கணக்காய்வு அவதானிப்பின் பணிகளாக பெயரிடப்பட்டுள்ளது. அதற்கமைய முழுமையாக நிறைவேற்றப்பட்டிராத செயற்திட்டங்களின் எண்ணிக்கை | நடைமுறைச் சாத்தியமாக மற்றும் சரியானதாக திட்டமிடப்பட வேண்டியதுடன், அந்த திட்டங்களை அடைந்துகொள்ள முன்னுரிமை |

| | | | |
|---|---|---|---|
| | | 8 ஆகும். அவ்வாறே முழுமையாக நிறைவேற்றப்பட்டிராத சில செயற்திட்டங்களாக பெயரிடப்பட்டுள்ள பணிகள் தொழில்நுட்ப பணிகள் அல்லது செயற்திட்டமல்ல, கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளாகும். உதாரணம்: பேடன்ட் இற்காக விண்ணப்பித்தல், தொழிறசாலைகளின் கண்காணிப்பு (Industrial Visits), திறந்த நாள் நிகழ்ச்சித்திட்டம், சிறீமத் க்ளாக் ஞாபகார்த்த விரிவுரை போன்றவை ஆகும்.<br><br>அவ்வாறே தொழில்நுட்ப பதவியணியை இணைத்துக்கொள்வதற்காக நிலவும் சம்பள அடிப்படைகளின் அடிப்படையில் நிறுத்தி வைத்தல், ஆராய்ச்சிகளின் போது ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினைகள், தொழில்நுட்ப உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் செய்யும் போது ஏற்பட்ட தாமதங்கள் போன்ற பொதுவாக தாக்கமளிக்கும் பிரச்சினைகளின் அடிப்படையில் சில செயற்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்கு மீளாய்வாண்டினுள் முடியாது போயிருந்தது. | வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | சில பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் உள்ளபடியாக செலவிடப்பட்ட கிரயம் தனித்தனியாக காண்பிக்கப்பட்டிராமையால் நிதி முன்னேற்றத்தினை இனங்காண முடியாதிருந்தது. | நிறுவனத்தின் தொழில்நுட்ப பிரிவுகளின் செயற்பாடுகளின் அடிப்படையில் அவர்களுக்கு தேவையான உயர் தொழில்நுட்ப உபகரணங்கள் பொதுவான உருவமொன்றினை எடுப்பதுடன், அவை பொதுவாக அந்த வருடத்தில் அல்லது எதிர்வரும் வருடங்களில் | நடைமுறைச் சாத்தியமாக மற்றும் சரியானதாக திட்டமிடப்பட வேண்டியதுடன், அந்த திட்டங்களை அடைந்துகொள்ள முன்னுரிமை |

| | | | |
|---|---|---|---|
| | | நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது. இதன் காரணமாக அந்த பணிகளுக்காக தனித்தனியாக மூலதன செலவினங்கள் இனங்காணப்பட முடியாததுடன் செயற்திட்டத்திற்காக விசேடமாக மதிப்பிடக்கூடிய மூலதன செலவினங்கள் மாத்திரம் அந்தந்த பணிகளுக்காக தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது. | வழங்கப்பட வேண்டும். |
| (இ) | வெளிவாரி தரப்பினருக்கு புதிய தொழில்நுட்ப அறிவினை பகிர்ந்தளிப்பதற்காக பாடநெறிகளை கடாத்துவதற்கு நிறுவனத்தினால் 13 பாடநெறிகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 06 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் கேட்போர்கூடங்களின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டமையால் ஒவ்வொரு தொழில்நுட்ப பிரிவுகளின் பதவியணி வேறு முன்னுரிமை செயற்திட்டங்களுக்காக இணைப்பு செய்யப்பட்டிருந்தமையால், 2018 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட 13 பாடநெறிகளில் 6 இனை நடாத்த முடியாதிருந்தது. அவ்வாறே அந்த 6 பாடநெறிகளில் தொடர்பாடல் பிரிவின் இரு பாடநெறிகள் (2) இற்காக போதியளவான விண்ணப்பங்கள் கிடைத்திராமையால், அந்த பாடநெறிகளை நடாத்த முடியாதிருந்தது. | நடைமுறைச் சாத்தியமாக மற்றும் சரியானதாக திட்டமிடப்பட வேண்டியதுடன், அந்த திட்டங்களை அடைந்துகொள்ள முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். |